REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: மார்கழி 15உ வியாழன் (30—12—54) ★ ★ வெளியூர்: மார்கழி 15உ வெள்ளி (31—12—54) [இதழ் 171

13 வருடங்கள் பள்ளி செல்லாத மாணவி

ஒரு அரிசனப் பெண்மணி 13 வருடங்களாகப் பள்ளிக்கூடம் செல்லாமலிருந்ததற்காக ரூ. 45 அபராதம் விதிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

வட குஜராத்தில் உள்ள அம்ரெலி மாவட்டத்திலிருக்கும் சம்பா எனும் ஊரில் உள்ள ஒரு பள்ளியின் நிர்வாகிகள் அந்த அரிசனப் பெண்ணின் தந்தையை அபராதத் தொகை செலுத்துமாறு பணித்திருக்கின்றனராம்.

13 வருடங்களுக்கு முன், அந்தப் பெண்ணுக்கு மணமாகி இப்போது நான்கு குழந்தைகளுக்குத் தாயாகி இருக்கிறாராம், மணமானதிலிருந்து பள்ளி செல்வதை நிறுத்திக்கொண்ட அப்பெண்மணி, தனது பெயரை வகுப்புப் புத்தகத்திலிருந்து நீக்கிவிடுமாறு அதிகாரிகளுக்கு அறிவிக்காமலேயே இருந்துவிட்டாராம்.

சேலத்திற்கு நாமம்; ம. பி.-க்கு யோகம்!

10,000 தொழிலாளர் வேலை நிறுத்தம்

ஜெய்ப்பூர் (ஒரிசா)—

மச்சகுண்டா நீர்ப்பாசனத் திட்டத்தில் வேலை செய்து வருகின்ற சுமார் 10,000 தொழிலாளர்கள் சென்ற இரண்டு தினங்கள் தொட்டு வேலை நிறுத்தத்தை மேற்கொண்டுள்ளனர் என்று தெரிய வருகிறது. சென்ற சில காலத்திற்கு முன்னர், தாங்கள் கேட்டுக்கொண்ட கோரிக்கைகள் இன்னும் நிறைவேற்றப்படாமையால், அக்கோரிக்கைகளை உடனே நிறைவேற்ற வற்புறுத்தும் வகையில் இவ்வேலை நிறுத்தத்தை அவர்கள் மேற்கொண்டுள்ளனர் எனக் கூறப்படுகிறது.

விமானப் போக்கு - வரத்து ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

சம்பள விகிதத்தில் நியாயமாக நடந்துகொள்ளக் கோரிக்கை

சென்னை, டிச. 29—

இந்தியா விமானப் போக்குவரத்துக் கார்ப்பொரேஷனைச் சேர்ந்த ஊழியர்கள், மீனம்பாக்கம் விமான நிலையத்தில் கூடி அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர்.

தங்களின் சம்பள விகிதம், இன்னும் மற்றவற்றில் நியாயமாக நடந்துகொள்ளுமாறு கோரி நிறுவனத்தின் தலைவரான ஷங்கர் பிரசாத் பம்பாயிலிருந்து விமான மூலம் திரும்பிய நேரத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர்.

இதற்கென நியமிக்கப்பட்ட கமிட்டியின் சிபாரிசுகளை இன்னமும் நிர்வாகிகள் பரிசீலித்துக் கொண்டிருப்பதாக பிரசாத் அறிவித்திருக்கிறார்.

மின்சாரத் தொழிலாளர் வேலை நிறுத்தம்

'வேகம்' குறைகிறதாம்

பெங்களூர், டிச. 29—

மைசூர் மாநிலமெங்குமுள்ள மின்சார இலாகா ஊழியர்கள் மேற்கொண்ட வேலை நிறுத்தம் இப்போது சிறிதளவு குறைந்து வருவதாகவும், பெரும்பான்மை ஊழியர்கள்—நிர்வாகிகள், குமாஸ்தாக்கள் உட்பட வேலைக்குத் திரும்பிவிட்டனர் எனவும் கூறப்படுகிறது.

பெங்களூரிலும், லக்கவள்ளி, மல்லேஸ்வரம் எனும் இடங்களில் மின்சாரக் கம்பிகள் அறுக்கப்பட்டு மின்சார வினியோகம் துண்டிக்கப்பட்டது. இப்போது நிலைமை திருப்திகரமாகவே இருக்கிறதென்றும், பொதுவில், மாநில முழுமையுமே மின்சார வினியோகம் தடையின்றி நடைபெற்று வருகிறது எனவும் கூறப்படுகிறது.

நடப்பு ஆண்டில் இந்தியாவுக்கு வருகை தந்துள்ள அயல் நாட்டு உல்லாசப் பிரயாணிகளின் மூலம் இந்தியாவுக்கு, ரூ. 5 கோடி அந்நிய நாணயச் செலாவணியாகக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உள்நாட்டுப் பண்டிதரைத் திருப்தி செய்ய உலகப் பண்டிதர் தந்த வாக்கு!

நிறைவேற்றப்படும் என ரவி சங்கர் சுக்லா திட நம்பிக்கை

ரஷ்ய உதவியுடன் மத்தியப் பிரதேசத்தில் உருக்குத் தொழிற்சாலை

"ரஷ்ய உதவியுடன் நிறுவப்பட இருக்கும் உருக்கு இரும்புத் தொழிற்சாலைக்கு, பாய்லாய்தான் (மத்தியப் பிரதேசம்) சிறந்த இடமாகும்."

"இவ்விடத்தை அண்மையில் பார்வையிட்ட ரஷ்ய நிபுணர்கள், இடத்தையும், இப்பகுதியில் மூலப் பொருட்கள் கிடைக்கும் வசதிகளையும் அறிந்து திருப்தி கொண்டுள்ளனர்."

"இரண்டாவதாக நிர்மாணிக்கப்பெறும் உருக்கு இரும்புத் தொழிற்சாலையை, மத்திய பிரதேசத்திலேயே நிர்மாணிக்க ஏற்பாடு செய்வதாக இந்தியப் பேரரசின் தொடர்புகொண்ட ஒருவர் வாக்களித்துள்ளார். அவ்வாக்கு நிச்சயமாக நிறைவேற்றப்படும் எனத் திடநம்பிக்கை கொண்டிருக்கிறேன்."

—இவ்வாறு, மத்திய பிரதேச முதலமைச்சர் பண்டிதர் ரவி சங்கர சுக்லா, சென்ற வார இறுதியில் நாகபுரியில் நடைபெற்ற கூட்டமொன்றில் கூறியுள்ளார்.

ஒரிசா மாநிலத்தில் உள்ள ரூர்கேலா பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள உருக்குத் தொழிற்சாலையில், அச்சு—கன உருக்குத் தகடுகள் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டிருக்கின்றன. அத்தகடுகளில் ஒரு பகுதி பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படக்கூடும்.

பாய்லாயில் துவக்கப்படும் இரண்டாவது தொழிற்சாலை, உள்நாட்டின் கட்டிடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான உருக்குப் பொருட்களை உற்பத்தி செய்யும்.

இந்தியாவின் பலவகைப்பட்ட தொழில் திட்டங்களை வெற்றிகரமாக நிறுவுவதற்கு, மொத்தத்தில் 60 லட்சம் டன் உருக்கு தேவைப்படுகிறது. இத்தேவையை நிரப்ப மேலும் சில உருக்குத் தொழிற்சாலைகளைத் துவக்க வேண்டியது அவசியமாகிறது.

★

இதற்கென்ன சொல்வார்களோ 'ஏக இந்தியா'க்காரர்கள்?

"மத்திய அரசாங்க நிதி மந்திரி, வருகிற ஆண்டுகளில் சுமார் ஒரு கோடியே 20 லட்சம் பேருக்கு வேலை தருவதற்கான திட்டங்களைத் தீட்டியுள்ளார்.

"ரூ. 400 கோடி முதல் 500 கோடி வரை உத்தேசச் செலவில் மூன்று அல்லது நான்கு உருக்குத் தொழிற்சாலைகளை அமைக்கத் திட்டங்கள் இருக்கின்றன.

"இத்திட்டங்கள் தென்னிந்தியாவில் இடம் பெறுவிடினும் இன்னும் இரண்டு வருடம் நான்கு மாத காலத்தில் ஒரு கோடி 20 லட்சம் பேருக்கு வேலை தருவதற்கான திட்டங்கள் நடைமுறைக்கு வர ஆரம்பித்துவிடும்.

"கடந்த மூன்றாண்டு காலத்தில் நாட்டில் பொருளாதார நிலையை சீராகவே காப்பாற்றி வந்துள்ளோம். அது எதிர்காலத்தில் திறம்படக் காரியமாற்ற போதுமான நம்பிக்கையைத் தந்திருக்கிறது,"

என்று சென்னை லட்சுமிபுரம் வாலிபர் சங்க கூட்டத்தில் பேசிய மத்திய மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி தெரிவித்திருக்கிறார்.

★

இரண்டாவது உருக்கு தொழிற்சாலை

மத்திய பிரதேசத்தில் நிறுவப்படும் என மந்திரி நந்தாவின் சூசக அறிவிப்பு

நாகபுரி, டிச. 29—

"இந்தியத் துணைக் கண்டத்தில் இரண்டாவதாக அமைக்கப் பெறும் உருக்குத் தொழிற்சாலை மத்தியப் பிரதேச மாநிலத்தில் நிறுவப்படலாம்,"

என்று, மத்திய அரசாங்க அபிவிருத்தி, திட்ட இலாக்கா மந்திரி குல்ஜாரிலால் நந்தா இங்கு சூசகமாகத் தெரிவித்திருக்கிறார்.

நிலக்கரி, தண்ணீர், போக்குவரத்து வசதிகள், கனிப் பொருள்கள் இவற்றைக் கொண்டு பார்த்தால் மத்தியப் பிரதேசத்திற்கு ஒரு உருக்குத் தொழிற்சாலை நிறுவ நிச்சயமாக ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டதுடன், தொழிற்சாலை நிறுவுவது பற்றி ரஷ்ய நிபுணர்களுடன் இந்திய அரசாங்கம் தொடர்ந்து பேச்சு வார்த்தைகள் நடத்தி வருகிறதாம்.

மத்திய சர்க்கார் அயல்நாட்டுத் தந்திப் போக்குவரத்து நிறுவனம் தற்போது 17 'ரேடியோ - போட்டோ சர்வீசு'களை நடத்தி வருகிறது.

திராவிட, ஆரிய கலாச்சாரங்களிடை என்றும் மோதுதல் கிடையாதாம்!

இரண்டின் மோதுதலிலிருந்து உருவானதே இந்து நாகரீகமாம்!

முன்னுக்குப்பின் முரண்பட பேசும் மதவெறியர்

"ஆரிய-திராவிட கலாச்சாரங்களிடையே என்றுமே எவ்வித மோதுதல்களும் இருந்ததில்லை; இந்த இரு நாகரீகங்களின் கூட்டுச் சேர்க்கைதான், இரண்டு நாகரீகங்களின் மோதுதல்களினால் ஏற்பட்ட ஒற்றுமையும், இரண்டு நாகரீகங்களுடையவும் கூட்டுறவு முயற்சியின் அடிப்படையில் ஏற்பட்ட இணைப்பும்தான், இந்து கலாச்சாரமாகும்,"

என்று அகில இந்திய மாணவர் நிறுவனமொன்றில் பேசுகையில், இந்து மகா சபைத் தலைவர் என். சி. சட்டர்ஜி குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"நமது மிகப் பெரிய கடவுளர்களான சிவன், சுப்பிரமணியன் போன்றவர்களும், சக்தி பூஜையும்,

(4-ம் பக்கம் பார்க்க)

எஃகு தொழிலில் புதிய முறை

மேற்கு ஜெர்மன் நிபுணர்கள் கண்டுபிடிப்பு

எஃகு இரும்பு உற்பத்தியில் புதிய முறை ஒன்றை மேற்கு ஜெர்மன் தொழில் நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளார்களாம். இந்த முறையினால் உயர்தர எஃகு—இரும்பு தயார் செய்யும் கால அளவு பாதியாகக் குறையுமென்று சொல்லப்படுகிறது.

'போகாமர் வெரின் ஸ்டீல் ஒர்க்ஸ்' என்ற நிலையத்தார், ஹைட்ரஜன் என்னும் வாயு இல்லாத உயர்தர எஃகு தயாரிக்கும் முறையைக் கண்டுபிடித்தார்களாம். ரூர் பிரதேசத்தில் உள்ள இந்த தொழிற்சாலையின் பெரும் பகுதி சுவீடனைச் சேர்ந்த டாக்டர் அக்சல் வென்னர் கிரென் என்பருக்குச் சொந்தமாம்

இப்புதிய முறைக்குப் பெயர் "வாகுவம் காஸ்டிங்" என்பதாம். இம்முறையைத் தங்கள் நாட்டில் கையாள முடியுமா என்று அமெரிக்கா, சுவீடன் நிபுணர்கள் ஆலோசித்து வருகிறார்களாம்.

காற்றில்லாத பம்புகளில், தண்ணீர் போன்ற நிலையில் உள்ள எஃகு அனுப்பப்படுகிறது; அப்போது, எஃகின் உள்ளே இருக்கும் ஹைட்ரஜன் (நீர்வாயு) வெளியேறுகிறது என்று சொல்லப்படுகிறது.

★

சேலம் இரும்புத் தொழிற்சாலை: டில்லியின் அலட்சிய மனப்பான்மை

சென்னை சர்க்காரின் அக்கரையைப் பொறுத்ததாம்

தென் இந்தியப் பிரச்சினை பற்றி இப்போது நடைபெற்ற பாராளுமன்றத்தில் வலியுறுத்தப்பட்டதில், சேலம் இரும்புத் தொழிற்சாலை பற்றியது முக்கியமானதாகும். ரஷிய உதவியுடன் ஆரம்பிக்கப்படவிருக்கும் இத்தொழிற்சாலையை சேலத்தில் ஆரம்பிக்க வேண்டுமென்பது தென்னிந்திய உறுப்பினர்களின் கோரிக்கைகளில் ஒன்று.

இதுபற்றி தென்னிந்திய உறுப்பினரொருவரின் குறுகிய கால கேள்வி ஒன்றுக்கு மத்திய சர்க்கார் அளித்த பதில், பிரச்சினையைத் தட்டிக்கழிப்பதாக இருந்ததாம்.

இரும்புத் தொழிற்சாலை ஆரம்பிப்பது என்ற பிரச்சினை முழுமையுமே ஆலோசனையில் இருப்பதாக உற்பத்தி இலாகா அமைச்சர் கே. சி. ரெட்டி கூறினாராம்.

"நெய்வேலியில் கிடைக்கும் நிலக்கரி, சேலத்தில் கிடைக்கும் இரும்பு இவை இரண்டையும் சேர்த்து திட்டம் ஏதாவது பரிசீலிக்கப் பட்டதா?"

என்று, மற்றொரு தென்இந்திய உறுப்பினர் கேட்டாராம்; ஆனால், இக்கேள்விக்கு தெளிவான முறையில் பதில் இல்லையாம்.

தென்னிந்தியாவின் முக்கியமான திட்டங்களில் ஒன்றான இத்திட்டத்தின் எதிர்காலம், சென்னை சர்க்கார் எவ்வளவு தூரம் இதில் அக்கரை காட்டுகிறது என்பதைப் பொறுத்திருக்கிறதாம்.

மதுரை மாநாடுகள்-ஜன. 8, 9-ல்!

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 30—12—1954 வியாழன்

திரை மறைவில் சதி!

1830-ல், ஏறத்தாழ 125 ஆண்டுகளுக்கு முன் சேலம் மாவட்டத்தில் உள்ள மேட்டூர் அணையிலிருந்து காவிரிக்கரையின் 10 கல் தொலைவில் உள்ள புல்லம்பட்டியில், சிறிய அளவில் ஒரு உருக்கிரும்புத் தொழிற்சாலை நிறுவப்பட்டது. கிழக்கிந்திய கம்பெனியில் பணிபுரிந்துவந்த ஒரு வெள்ளை சிவில் அதிகாரி, அப்பெரும் பணியினைத் தொடங்கினர். ஆனல், அத்தொழில் 1858-ல் முடிவாகக் கைவிடப்பட்டுவிட்டது.

1890-ல், இதுபற்றி சர் தாமஸ் ஆலண்ட் எனும் ஆங்கிலேயர் செய்த ஆராய்ச்சியின் முடிவாக, சேலத்தில் ஒரு உருக்கிரும்புத் தொழிற்சாலையை நிர்மாணிக்க நினைத்தபோதிலும், அதற்கான முயற்சியை மேற்கொள்ளாமல் சென்னை அரசாங்கம் இருந்துவிட்டது.

சர் தாமஸ், 'இரும்புத் தொழிலின் வளர்ச்சி' என்ற பெயரில் ஒரு சிறு நூலும் இயற்றியுள்ளார். சேலம், திருச்சி ஆகிய இரண்டு இடங்களிலும் கிடைக்கக்கூடிய இரும்பைக் குறித்து விளக்கங்கள் பல தந்துள்ளார். அத்துடனும் அவர் நின்றுவிடவில்லை. சுற்று வட்டாரங்களில் நிலக்கரியும், காட்டுக்கரியும் எந்த அளவு கிடைக்கக்கூடும் என்பதையும் ஆராய்ந்தறிந்து அந்நூலில் குறிப்பிட்டுள்ளார்.

சேலத்தில் மண்ணுக்கடியில் மறைந்து கிடக்கும் இரும்பைத் தோண்டி எடுத்து, மக்களுக்குப் பயன்படும்படியான உருக்குப் பொருட்களாக மாற்றியமைக்க ஒரு தொழிற்சாலையை நிறுவவேண்டியதின் அவசியத்தையும், அத்துறையில் கடந்த ஒன்றேகால் நூற்றுண்டாக மேற்கொண்ட இரண்டொரு முயற்சிகளையும், அவைகளைக் கைவிட்ட சோகக் கதைகளையும், மேற்குறித்துள்ள வரலாற்றுச் சம்பவங்கள் விளக்குகின்றன.

அந்த ஒன்றேகால் நூற்றுண்டு பெரும் விழைவு, மீண்டும் நமது காலத்தில் தலைதூக்கலாயிற்று. 1947-வரையிலும் இக்கோரிக்கை வெளியில் நடமாடிக் கொண்டுதான் இருந்தது. இருந்தாலும், இந்தியத் துணைக் கண்டத்திற்கு அரசியல் சுதந்திரம் கிடைத்ததும், உரிமையுடன், இக்கோரிக்கை புதிய முறுக்கோடு, முன்னிலும் தெளிவாகத் தலை தூக்கிற்று.

கடந்த ஒன்றேகால் நூற்றுண்டாக உருவாகி உரம் பெற்று வளர்ந்து, திராவிட மக்களில் விஷயமறிந்தப் பெரும்பான்மையினரிடம், இன்று இக்கோரிக்கை வைரமேறிப்போயிருக்கிறது எனக் கூறுவது மிகையாகாது. இக்கோரிக்கைக்கு வெற்றி தேடுவதில், அரசியல் கருத்து வேற்றுமைகள் குறுக்கிடவில்லை. எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தபோதிலும், திராவிட இனத்தவர் இத்துறையில் ஒன்றுபட்டுள்ளனர்—இனியும் வெற்றி கிட்டுகிற வரையில் அமைதியாக உரிமைக்குப் போராடவும் தயாராக உள்ளனர்.

கட்சிப் பாகுபாடு பாராட்டாமல் திராவிடர் அனைவரிடமுமிருந்து கிளம்பும் நீண்டகாலத்தைய ஒரு விருப்பத்தைத்தான், 'மனக்கோட்டை' எனக் கேலி பேசுகிறர், எட்டாத் தொலைவில் இருக்கிறேம் என்ற அற்ப நினைப்பில் இந்தியப் பேரரசின் அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார். அமைச்சரின் எளனம் முறியடிக்கப்பட வேண்டும் என்பதில் நம்மினத்தவர் ஒருவருக்கும் மாறுபட்ட கருத்திருக்கத் துளியும் நியாயமில்லை.

சேலத்தில் உருக்குத்தொழிற்சாலையை நிறுவுவதற்கு, அங்கு நிலக்கரி கிடையாது என்ற ஒன்றைத்தான் மேற்படி கிண்டல் செய்த அமைச்சர் காரணம் காட்டியுள்ளார்.

சேலத்தை ஒட்டியுள்ளது தான் தென்னுற்காடு. அம்மாவட்டத்தில்தான் நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம் உள்ளது. அங்கு தோண்டி எடுக்கப்பெறும் நிலக்கரியை, சேலத்திற்குக் கொண்டு போவதற்கு போதிய இரயில் பாதை வசதி இப்பொழுது இருக்கவும் இருக்கிறது. எனவே, உருக்குத் தொழிற்சாலை நிறுவப்படும் சேலத்திற்கு நெய்வேலி நிலக்கரியைக் கொண்டு செல்வதில் வசதிக் குறைவு ஏற்பட இடமே கிடையாது. அதற்காகும் போக்குவரத்துச் செலவு பிரச்சினை ஒன்றுதான் தீர்க்கப்பட வேண்டியதாகும்.

நெய்வேலி நிலக்கரியை சேலத்திற்குக் கொண்டுபோவதால், சேலம் இரும்புத் தொழிற்சாலையில் தயாரிக்கப்படும இரும்புப் பொருட்களின் உற்பத்திச் செலவில் ஏற்படும் விலை உயர்வு, வட நாட்டிலிருந்து தென்னுட்டிற்குக் கொண்டு வருவதில் இரும்புப் பொருட்களுக்குச் செலவாகும் போக்குவரத்துச் செலவைக் காட்டிலும் குறைவானதாகத்தான் இருக்க முடியும். அதாவது, வட நாட்டிலிருந்து இங்கு கொண்டுவரப்படும் இரும்புப் பொருட்களுக்கு, அவைகளை இங்கு கொண்டு வருவதற்கான வழிச் செலவையும் கூட்டி நிர்ணயிக்கப்படும் விலையைக் காட்டிலும், சேலம் தொழிற்சாலையில் உருவாக்கப்படும் இரும்புப் பொருட்கள் விலையில் குறைந்துதான் இருக்கும். எனவே, 'சேலத்தில் இரும்பு கிடைக்கும் இடத்திலேயே நிலக்கரி கிடைக்கவில்லை; நெய்வேலியிலிருந்து நிலக்கரியைக் கொண்டு வருவதினுல் இரும்பு விலை கூடுதலாகும்; ஆனதால் சேலத்தில் ஒரு உருக்குத் தொழிற்சாலையை நிறுவுவது நல்ல பயனளிக்காது; எனவே, சேலத்தின் இரும்பு வெறும் மண்ணுகக் கிடப்பதே நலம்' எனச் சமாதானங் கூறக் கிளம்பும் அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி போன்றவர்களுக்கு பதில்கூறும் வகையில், மூன்று திங்களுக்கு முன்பே, 'இந்து' இதழில் மேற்குறிப்பிட்டுள்ள சமாதானத்தை விளக்கமாக ஒருவர் வரைந்துள்ளார்.

சேலத்தில் நிலக்கரி கிடையாது; எனவே, அங்கு ஒரு உருக்குத் தொழிற்சாலையை நிறுவ முடியாது; அது வெறும் 'மனக் கோட்டை'—எனக் கிண்டல் செய்யும் டி. டி. கிருஷ்ணமாச்சாரி, நிலக்கரியை முன்தள்ளி உருக்குத் தொழிற்சாலை துவங்குவதை மறுப்பது பொருந்தாது என்பதை மேலே விவரித்துள்ளோம். நிலக்கரியைக் குறித்து அவர் கூறினது வெறும் பொய்; சேலத்தில் உருக்குத் தொழிற்சாலையை நிர்மாணிக்க இந்தியப் பேரரசு விரும்பாததற்கு, அமைச்சர் கூருத—கூற முடியாத—கூறத் துணியாத—கூறத் துணிவு ஏற்பட முடியாத—வேறு ஒரு அந்தரங்கக் காரணம் இருக்கிறது என்பதை நாம் குறிப்பிடுகிறேம். அதை மறுக்க, அவருக்குத் துணிவிருந்தால் தாராளமாக மறுக்கட்டும்.

மேற்கு ஜெர்மனியின் ஒத்துழைப்புடன் ஒரு உருக்குத் தொழிற்சாலையை இந்தியாவில் நிறுவ, சில திங்களுக்கு முன் இந்தியப் பேரரசு முன்வந்தது. அப்படி நிறுவப்படும் தொழிற்சாலையை, தம் தம் மாநிலத்தில் நிறுவ வேண்டுமென மத்திய பிரதேசம்—ஒரிசா—பீகார்—வங்கம் ஆகிய மாநிலங்கள் போட்டியிட்டன.

துவக்கத்தில், மத்திய பிரதேசத்தில் தொழிற்சாலையை நிறுவுவது என இந்தியப் பேரரசு எண்ணியது. இந்தியப் பேரரசு நியமித்த மூவர் நிபுணர் குழுவும், மத்திய பிரதேசத்தில் உருக்குத் தொழிற்சாலையை நிறுவுவதையே முதற்கண் சிபாரிசு செய்தது. முடிவாக, இந்தியப் பேரரசு முதலில்கொண்டிருந்த முடிவை மாற்றிக்கொண்டது. ஒரிசாவில் உள்ள ரூர்கேலாவில் உருக்குத் தொழிற்சாலையை நிர்மாணிக்கும் ஏற்பாட்டிற்கு வந்துவிட்டது.

சேலத்தில் உருக்குத் தொழிற்சாலை நிறுவுவதற்கு ஒருப்படாத இந்தியப் பேரரசின் ஓரவஞ்சனையைக் கண்டு சென்னை அரசாங்கம் வேடிக்கைப் பார்த்துக்கொண்டு இருப்பதுபோல் இல்லாமல், மத்தியப் பிரதேசம் இந்தியப் பேரரசின் மாற்றமான முடிவைக் கண்டு கொதித்தெழுந்தது. இந்தியப் பேரரசின் போக்கைக் கண்டித்து மத்திய பிரதேச சட்டசபை தீர்மானம் ஒன்றையும் ஒரே மனதாக நிறைவேற்றிற்று.

இந்தியப் பேரரசில் உள்ள உயர் அதிகாரிகள் சிலரும், தொழில் அதிபர்கள் சிலரும், தொழிற்சாலையை மத்திய பிரதேசத்தில் நிறுவமுதலில் ஒப்புக்கொண்ட இந்தியப் பேரரசு அதை முடிவில் மாற்றிக்கொண்டு ஒரிசாவில் நிறுவ முடிவு கட்டியதற்குக் காரணஸ்தர்களாவர் என, மத்திய பிரதேச சட்ட சபையில் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டிப் பேசினர், முதல் மந்திரி ரவி சங்கர சுக்லாவும், தொழில் மந்திரி டி. கே. மேதாவும். அத்துடனும் நிற்கவில்லை. திரை மறைவில் நடந்த சதியை, மந்திரி பதவியை விலையாகக் கொடுத்தேனும், பொதுமக்கள் முன் அம்பலமாக்கி விடுவேன் எனவும் முதலமைச்சர் சுக்லா சட்டசபையில் சூளுரைத்தார். நிற்க,

அண்மையில், நாகபுரியிலுள்ள வர்த்தகக் கல்லூரியில் மந்திரி சுக்லா பேசியிருக்கிறர். அப்பேச்சின் முக்கிய பகுதியை, இவ்விதழின் வேறு ஒரு பக்கத்தில் வெளியிட்டிருக்கிறேம். அதில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது :—

“இரண்டாவதாக நிர்மாணிக்கப் பெறும் உருக்கு இரும்புத் தொழிற்சாலையை, மத்திய பிரதேசத்திலேயே நிர்மாணிக்க ஏற்பாடு செய்வதாக இந்தியப் பேரரசுடன் தொடர்பு கொண்ட ஒருவர் வாக்களித்துள்ளார். அவ்வாக்கு நிச்சயமாக நிறைவேற்றப்படும் எனத் திடநம்பிக்கைக் கொண்டிருக்கிறேன்.”

இதற்கு என்ன பொருள்? ரஷ்யக் கூட்டுறவில் நிறுவ இருக்கும் தொழிற்சாலையை, ரஷ்ய நிபுணர்கள் இந்தியாவிற்கு வந்து, தகுந்த இடத்தைத் தேர்ந்தெடுப்பதற்கு முன்னதாகவே, மத்திய பிரதேசத்தில் நிர்மாணிப்பது, என இந்தியப் பேரரசின் சார்பில் மத்தியப் பிரதேச முதலமைச்சருக்கு வாக்களிக்கப்பட்டுவிட்டிருக்கிறது என்பது விளக்கமாகத் தெரிகிறது. எனவே, இதில் ரஷ்ய நிபுணர்கள் முடிவுப்படிதான் இத்தொழிற்சாலை நிர்மாண ஏற்பாடு என்பதில் துளியும் பொருத்தமே கிடையாது.

ரஷ்ய நிபுணர்களின் முடிவு வேறு மாதிரியாக இருந்த போதிலும்கூட, மத்தியப் பிரதேச அரசாங்கத்திற்கு தனது சார்பில் ஏற்கனவே கொடுத்துவிட்ட முடிவை, இந்தியப் பேரரசு நிறைவேற்றித்தீரவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது. மத்தியப் பிரதேசத்தில் உருக்குத் தொழிற்சாலையைத் துவங்குவது என்ற முடிவில், இந்தியப் பேரரசின் வாக்குறுதியை எப்படியும் நிறைவேற்றுவது என்பதுதான் முக்கிய இடம் பெற்றிருக்கிறது. நிபுணர்கள் முடிவு இரண்டாம் பட்சமாகத்தான் கொள்ளப்பட்டிருக்கிறது என்பது தெளிவு.

மத்திய பிரதேசத்தில் உள்ள பாய்லாய் பகுதியைப் பார்வையிட்ட ரஷ்ய நிபுணர்கள், அங்குள்ள வசதியைக் கண்டு முழுதிருப்தி கொண்டுள்ளனர் என முதலமைச்சர் சுக்லாவும், தென்னுட்டில் உருக்குத் தொழிற்சாலையை நிர்மாணிக்கும் நோக்கம் ரஷ்ய நிபுணர்கள் ஆரம்ப அறிக்கையில் இல்லை என அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரும் குறிப்பிட்டுள்ளனர். உருக்குத் தொழிற்சாலை நிர்மாண விஷயத்தில் ரஷ்ய நிபுணர்கள் தென்னுட்டை ஒதுக்கிவிட்டதற்கும், மத்திய பிரதேசத்தைத் தேர்ந்தெடுத்ததற்கும் இந்தியப் பேரரசின் தூண்டுதலே காரணமாக இருந்தாலும் இருக்கலாம். அப்படி இந்தியப் பேரரசு நடந்துகொண்டிருக்காது எனக் கொள்வதற்குள்ள நியாயத்தைக் காட்டிலும், அப்படித்தான் ரஷ்ய நிபுணர்களை இந்தியப் பேரரசு கட்டுப்படுத்தி இருக்கிறது என முடிவு கட்டுவதற்குத்தான், மறுக்க முடியாத அளவில் தகுந்த நியாயமிருக்கிறது. அந்த நியாயந்தான், இரண்டாவதாகத் துவங்க இருக்கும் தொழிற்சாலையை மத்தியப் பிரதேசத்திலேயே துவக்க ஏற்பாடு செய்வதாக மத்தியப் பிரதேச முதலமைச்சரிடம், இந்தியப் பேரரசின் சார்பில் முன்கூட்டியே தாரை வார்த்துக் கொடுத்துள்ள திரை மறைவு வாக்குறுதியாகும். இவ்வுண்மையை மறுக்க முயல்வது, இரவைப் பகலெனும் பேதமைமையையே ஒக்கும்.

ரஷ்ய நிபுணர்கள் கொண்ட முடிவிற்காக, அவர்களைக் குறை கூறுவதில் பொருள் இல்லை. அவர்கள் முடிவில் மறுக்க முடியாத நியாயமிருக்கக் கூடும். மற்றப் பகுதிகளில் இல்லாத வசதி, உருக்கு தொழிற்சாலையை நிறுவுவதற்குத் தேவைப்படும் வசதி மத்திய பிரதேசத்தில் இருக்கலாம். எனவே, அவர்கள் அவ்வாறு முடிவு கூறினது நியாயமானதே.

ரஷ்ய நிபுணர்களின் முடிவை முன் வைத்துதான், உருக்குத் தொழிற்சாலை ஒன்றைப்பெறும் வாய்ப்பு மத்திய பிரதேசத்திற்குக் கிடைத்துள்ளதுஎன்பதும், அவ்வாய்ப்பு சேலத்திற்குக் கிட்டாமல் போய்விட்டது என்பதும் பொருந்தாக் கூற்று—உண்மைக்குப் புறம்பான பொய்க் கூற்று என்பதை வலியுறுத்துவதுதான் நமது குறிக்கோள். சேலத்திற்கு ஒரு உருக்குத் தொழிற்சாலையை நியமிக்க இந்தியப் பேரரசு விரும்பாததற்கு, நிலக்கரி கிடைக்காமையும், ரஷ்ய நிபுணர்கள் முடிவையும் காரணமாகக் காட்டக் கிளம்பியுள்ள அமைச்சர் டி. டி. கே. - யின் கூற்று வெறும் புகல்; திரை மறைவில் ஏற்கனவே நடந்துள்ளதை திராவிடர் கண்களில் படாமல் மறைக்க எடுத்துக்கொண்ட பித்தலாட்டம் என்பதே நமது முடிவு.

புதிய தொழிற்சாலையை மத்தியப் பிரதேசத்தில் துவங்குவதாக, இந்தியப் பேரரசு ஏற்கனவே கொடுத்திருந்த வாக்குறுதிக்கு நிபுணர்களின்முடிவு ஒரு அறவழிப் பாதுகாப்பாகப் போய்விட்டது. குருவி உட்கார்ந்ததற்கும் பனம் பழம் விழுந்ததற்கும் பொருத்தமாகப் போய்விட்டது; அவ்வளவுதான்.

உருக்குத் தொழிற்சாலை விவகாரத்தில் மத்தியப் பிரதேசத்திற்கு வெற்றி கிட்டியதற்கும், தென்னுட்டிற்குத் தோல்வி ஏற்பட்டதற்கும் இந்தியப் பேரரசின் திரைமறைவு சதியே மூல காரணம். இதை மறைக்கும் முயற்சியில் தான், நிலக்கரியைக் காட்டி, 'சேலத்திலா இரும்புத் தொழிற்சாலை? அது மனக்கோட்டை, என இந்தியப் பேரரசின் தொழில்-வர்த்தக அமைச்சர் டி. டி கிருஷ்ணமாச்சாரியார் திராவிடரை எளனமாகப் பேசினர் என்பதே நமது முடிவாகும்.

பாலாற்றுத் தண்ணீர்

பாலாற்று நீரை வட ஆற்காடு, செங்கற்பட்டு ஆகிய இரு மாவட்டங்களுக்கும் விடுவது குறித்து மைசூர் மாநில சர்க்காரை ஒரு திருப்திகரமான முடிவுக்கு வருமாறு செய்வதில், இந்திய சர்க்கார் தம் செல்வாக்கை உபயோகிக்க வேண்டுமென சென்னை சர்க்கார் கடிதம் ஒன்று எழுதியுள்ளதாகத் தெரிகிறது.

இந்தியாவில் நர்சுகள், மருத்துவச்சிகள், சுகாதாரப் பார்வையாளர்கள், ஆயாக்கள் ஆகியோருக்குப் பயிற்சியளிக்கும் நிறுவனங்களின் எண்ணிக்கை, 1950—51-ல் 418 ஆக இருந்தவை, 1953—54-ல் 969 ஆக அதிகரித்துவிட்டது; அவற்றில் பயிற்சி பெறுபவர்களின் எண்ணிக்கையும் 3,810 ஆக இருந்தது, 9,040 ஆக அதிகரித்திருக்கிறது.

மே. ஜெர்மனியை 'நேட்டோ'வில் சேர்க்கும் பிரச்சினை

பிரான்ஸ் சட்டசபை ஒப்புக்கொண்டது

சோவியத் நிலைபற்றி மெண்டே பிரான்ஸ் விளக்கம்

பாரிஸ், டிச. 28—

பிரான்ஸ் தேசிய சட்டசபை இன்று மேற்கு ஜெர்மனியை 'நேட்டோ'வில் சேர்ப்பது என்ற முடிவை ஒப்புக்கொண்டுவிட்டது. இதற்காகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கைத் தீர்மானத்தில் பிரதமர் மெண்டே பிரான்ஸ் வெற்றி பெற்றார்.

அடுத்து, மேற்கு ஜெர்மனியை ஆயுதபாணியாக்குவது என்ற பாரிஸ் ஒப்பந்தத்தின் மற்றொரு பகுதியை பிரான்ஸ் சட்டசபை ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது. இதற்கான விவாதம் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது.

மேற்கு ஜெர்மனியை அட்லாண்டிக் நாடுகள் ஒப்பந்தத்தில் சேர்க்க வேண்டும் என்பது குறித்துப் பேசுகையில் பிரெஞ்சுப் பிரதமர் கூறியதாவது :—

"இப்போதைய பிரச்சினை, அட்லாண்டிக் ஒப்பந்தம்தான். நாம் அட்லாண்டிக் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் நமக்குள்ள இடத்தைப் பாதுகாத்துக் கொள்வதா? அல்லது, நமது நேச நாடுகளிடமிருந்து நாம் பிரிந்து அவர்களை அட்லாண்டிக் நிறுவனத்தை அமைக்குமாறு விட்டுவிட்டு நாம் அவர்களுடன் ஒத்துழைக்க மறுத்துவிடுவதா?

"தேசிய சட்டசபை, ஜெர்மனியை 'நேட்டோ'வில் சேர்ப்பதை ஒப்புக்கொண்டு ஜெர்மனியை ஆயுதபாணியாக்குவதை ஒப்புக்கொள்ள மறுக்கலாம்; ஆனால் பாரிஸ் ஒப்பந்தம் முழுவதையும் ஒன்றாகவே சர்க்கார் கருதுகிறது.

"மேற்கு ஜெர்மனியைப் பற்றி நாம் ஒப்புக்கொள்ளுமுன், ரஷ்யாவுடன் கலந்து பேசுவதில் வெற்றிக்குச் சந்தர்ப்பம் இருக்கிறது என்றால், நான், அப்படி முயற்சிப்பது எனது கடமை என்று நினைக்கிறேன்.

ஆனால் நமது நேச நாடுகளின் நண்பர்கள், 'பாரிஸ் ஒப்பந்தத்தை நாம் ஒப்புக்கொண்ட பிறகு ரஷ்யாவுடன் கலந்து பேசினால் வெற்றிக்கு அதிக சந்தர்ப்பங்கள் இருக்கின்றன' என்று கருதுகிறார்கள். நானும் அவர்கள் கருத்தை ஒப்புக்கொள்ளுகிறேன்.

"சோவியத்தைப் பொறுத்த மட்டில் அவர்களுக்கு பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்க எத்தனை மாதங்கள் இருந்தன; நாம் ஐரோப்பிய பாதுகாப்பு ஒப்பந்தத்தை நிராகரித்ததை அவர்கள் கண்டார்கள். அப்போது இது பற்றிப் பேச அவர்களுக்குச் சமயமிருந்தது. ஆஸ்திரிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட நாம் அனுப்பிய அழைப்புக்கு சோவியத் ரஷ்யா பயமுறுத்தல்களுடன் பதில் அளித்தது. மேற்கு நாடுகளின் கூட்டுறவைத் தகர்ப்பதே சோவியத் யூனியனின் நோக்கம். அதிலிருந்து, பிரான்சை கட்டாயமாக வெளியேற்ற விரும்புகிறார்கள் என்பது தெரிகிறது.

இக்காரணத்திற்காக நாம் மட்டும் எதிர்த்தாக வேண்டியிருக்கிறது. 'நல்ல நிலை தேவை' என்று சோவியத் யூனியன் விரும்புகிறதென்றால், பிரான்ஸ் அதற்காக முயற்சி செய்யும்; ஆனால், அட்லாண்டிக் அமைப்புக்குள்ளிருந்துதான் அம்முயற்சி மேற்கொள்ளப்படும்."

தொடர்ந்து பேசிய மெண்டே பிரான்ஸ், மேலும் கூறியதாவது:—

"பாரிஸ் ஒப்பந்தத்திற்கு மாற்றும் எதுவும் இல்லை என்று நான் உணர்வேன். இப்பிரச்சினையில், பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகளுடன் மீண்டும் புதிய பேச்சு வார்த்தைகள் நடைபெற வேண்டுமென்பது, நடைபெறாத ஒன்றாகும்.

ஜெர்மனியை ஆயுதபாணியாக்குவது, நம்மைப் பொறுத்தமட்டில் உணர்ச்சிபூர்வமாகத் தொல்லையளிப்பதுதான்.

ஆனாலும் மேற்கு ஜெர்மனியை ஆயுதபாணியாக்குவது தடுக்க முடியாததாகிவிட்டது. அட்லாண்டிக் அமைப்பில் பிரான்ஸ் கலந்துகொண்டு, அதன் மூலம் அது ஜெர்மனியை ஆயுதபாணியாக்குவதில் கட்டுப்பாடு செலுத்தும் தன்மையுடையதாகவும், கிழக்கு நாடுகளுடன் சிறந்த உறவுடன் விளங்கும்போது இது நன்றாகப் புரியும்.

அறிவின் விளைவாக ஏற்பட்டது பாரிஸ் ஒப்பந்தம். அதை ஒத்துக் கொள்ளுமாறு நான் உங்களைக் கோருகிறேன். அதை நிராகரிப்பது பிரான்சின் பாதுகாப்புக்குத் தீமை பயப்பதும், நாட்டையே நாசமாக்கும் முயற்சியில் பிரான்சைத் தள்ளிவிடுவதுமாகும்."

(இத்திங்கள் 24-ந் தேதியன்று, பிரிட்டன், பாரிஸ் ஒப்பந்தம் பற்றி பிரான்சை எச்சரித்தது. ஒப்பந்தத்தை பிரான்ஸ் நிராகரிப்பதன் மூலம் மேற்கு ஜெர்மனியை ஆயுதபாணியாக்குவதைத் தடுக்க முடியாது என்றும், பாரிஸ் ஒப்பந்தத்தை ஒப்புக்கொள்வது பிரிட்டிஷ் படைகளை ஐரோப்பாவில் வைத்திருக்கக் கோருவது என்றுதான் பொருள்படும் என்றும்பிரிட்டன் எச்சரித்தது.)

புதிய 'ரிகார்டு'!

அமெரிக்கா முழுவதும் கிறிஸ்துமஸ் விழாக் கொண்டாட்டத்தின் போது சென்ற வெள்ளி மாலை முதல் ஞாயிறு இரவு வரை 500-பேர்களுக்கு மேல் விபத்துக்களுக்காளாகி மாண்டனர் எனத் தெரிகிறது.

கார் விபத்துக்களினால் 387 பேர்களும், தீ விபத்துக்களினால் 63 பேர்களும், வேறு பலவிதமான விபத்துக்களினால் 60 பேர்களும் மாண்டிருக்கின்றனர்.

இந்த விழாக்காலத்தில் ஏற்படும் விபத்துக்களில், இதற்கு முன் இவ்வளவு அதிகமானபேர் மாண்டதில்லையாம்.

மதுரை மாநாடுகள்

★

"1955 ஜனவரி 8, 9 தேதிகளில், மதுரை மாவட்ட தி. மு. கழக 2-வது சமூக சீர்திருத்த, அரசியல் மாநாடுகள் நடைபெறும்.

மேற்படி மாநாட்டு டிக்கட்டுகள் மாநாட்டு அலுவலகத்திலும் (4, கட்ருபாளையம், மதுரை), அறிவுப் பூங்காவிலும்(9, திண்டுக்கல் ரோடு, மதுரை) கிடைக்கும்.

8—1—55 சனி காலை 7 மணிக்கு, மதுரை புகை வண்டி நிலையத்தில் தலைவர்களுக்கு வரவேற்பும், 9-1-55 ஞாயிறு காலை 8 மணிக்கு, மாநாட்டு ஊர்வலம், பெரிய விளக்குத் தூணிலிருந்து ஆரம்பித்து, கீழமாசி வீதி, வடக்கு மாசி வீதி, அழகரடி வழியாக மாநாட்டுப் பந்தலை அடையும்.

உள்ளூர், வெளியூர் கிளைக் கழகத் தோழர்கள் கொடியுடன் வரவேற்பிலும், ஊர்வலத்திலும் கலந்து சிறப்பிக்க வேண்டுகிறோம்,"

என, மாநாட்டுச் செயலாளர் மதுரை தோழர் எஸ். முத்து அறிவிக்கிறார்.

பத்து வயது சிறுமிக்கு பரதநாட்டிய 'பாவம்' தெரியுமா?

டாக்டர் அழகப்ப செட்டியார் கேள்வி

சென்னை, டிச. 28—

"தென்னிந்தியாவில் நாட்டியம், சங்கீதம் ஆகிய துறைகளில் மறுமலர்ச்சி (!) ஏற்பட்டிருப்பது பற்றி நாம் பெருமை கொள்ளலாம்."

"முறையாக பயிற்சி பெறுவதற்கு முன், சில பெற்றோர்கள், அவசரப்பட்டு தங்களுடைய பெண்களுக்கு அரங்கேற்றம் நடத்தி விடுகின்றனர். 10 அல்லது 11 வயதடைந்த இளஞ் சிறுமிகள் மேடையில் தோன்றி ஆட ஆரம்பித்து விடுகின்றனர். 'பாவ'ங்களை அக்குழந்தைகள் எப்படி உணர்ந்து ஆட முடியும்? சில வருடங்களுக்கு நன்றாய் கலையைப் பயின்ற பிறகே இவர்கள் மேடையில் தோன்ற வேண்டும்."

இவ்வாறு, டாக்டர் ஆர். எம். அழகப்ப செட்டியார், எட்டாவது தென்னிந்திய நாட்டிய கலா மாநாட்டை எழும்பூர் மியூசியம் தியேட்டரில் ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் கூறினார்.

ஆந்திர தேர்தல்:

14,000 வாக்குப்பதிவு சாவடிகள்

கர்னூல், டிச. 28—

ஆந்திரா பொதுத் தேர்தலுக்காக 167 சட்ட சபைத் தொகுதிகளில் சுமார் 14,000 வாக்குப் பதிவுச் சாவடிகள் அமைக்க நிர்வாகிகள் ஏற்பாடு செய்து வருகின்றனராம்.

ஐக்கிய முன்னணியின் பொதுத் திட்டம்

25 அம்சங்கள் உள்ளன

அடுத்து நடைபெறவிருக்கும் ஆந்திரப் பொதுத் தேர்தலுக்காக, காங்கிரஸ், பி. சோ. கிருஷிக் லோக் ஆகிய 3 கட்சிகளும் ஒன்று சேர்ந்து, 'ஐக்கிய முன்னணி' கூட்டமைப்பை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். இத்தேர்தலை முன்னிட்டு அந்த 'ஐக்கிய முன்னணி'யினர், 25 அம்சங்கள் கொண்ட பொதுத் திட்டமொன்றை வெளியிட்டுள்ளனர்.

இத்திட்டத்தில், ஏற்கனவே அமுலாகியிருக்கும் மதுவிலக்குத் திட்டத்தால் விளைந்த கேடுகளை நீக்குவதற்காக அது மாற்றியமைக்கப்படுமெனவும், மாநிலத்தில் நிலவும் வேலையின்மையைத் தவிர்க்க, பனஞ்சாறு இறக்கி அதனை வெல்லம் காய்ச்சுவது என்றும், இனும் கிராம உரிமையை ரத்து செய்து விவசாயிகளுக்குப் பாதுகாப்பளிப்பதற்காக நில உடைமை வரம்பை ஏற்படுத்துவதென்றும் கூறப்பட்டுள்ளது.

மேலும், கைத்தறி, குடிசைத் தொழில்களில் கவனம் செலுத்துவது, கட்டாய ஆரம்பக் கல்வியில் மிகுந்த சிரத்தை எடுத்துக்கொள்வது, மதுவிலக்கின் காரணமாக வேலை இழந்தவர்கட்கு மாற்று வேலைகள் தர முயற்சி எடுத்தல், ஆசிரியர்களின் பொருளாதார முன்னேற்றத்துக்கான கவனம் எடுத்துக் கொள்ளுதல், விவசாயிகட்கு மலிவான வகையில் வீட்டு மனைகள் கொடுக்க முயற்சித்தல், மின்சார உற்பத்தித் திட்ட பெருக்கத்திற்குத் திட்டங்கள் வகுத்தல், நந்திகொண்டா பாசனத் திட்டத்தையும் துங்கபத்திரா மேல் கால்வாயையும் அமைக்கும் வேலையைத் துரிதமாக்க முயற்சி எடுத்துக் கொள்ளல் ஆகிய இந்த அம்சங்களோடு, பின்தங்கிய வகுப்பினருக்கு மேல் படிப்பும் தொழில் நுணுக்கப் படிப்பும் கிடைக்க வேண்டிய வசதிகள் செய்து தருவதும், தொழிலாளர் நஷ்ட ஈடு சட்டத்தை விவசாயத் துறையிலும் விஸ்தரித்தல் ஆகிய அம்சங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

தமிழ் நாட்டில் நாத்திகம் ஏன் பரவுகிறது?

இலங்கை மந்திரியின் ஆராய்ச்சி

விருதை, டிச. 26—

"தமிழ்நாட்டில் நாத்திகம் பரவியிருப்பதற்குக் காரணம், மக்கள், சைவ போதனைகளைச் சரிவரப் பின்பற்றாததேயாகும். மேலும், மதவாதிகளெல்லாம், வைதீகச் சண்டைகளிலும், சச்சரவுகளிலும் மட்டுமே அக்கரை காட்டுபவர்களாக இருக்கின்றனர்; தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்யாத மடாதிபதிகளும், மக்களிடையே மத நம்பிக்கை குறைந்து போனதற்குக் காரணமானவர்களாவர்,"

—என்று, இங்கு நடைபெற்ற 49-வது சைவ சித்தாந்த மாநாட்டிற்குத் தலைமை தாங்கிப் பேசிய, இலங்கை மந்திரி திரு கந்தையா வைத்தியநாதன் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் பேசுகையில் அவர், திருப்பனந்தாள் மடத்தின் சேவையைப் பாராட்டினார்.

கோவில்களில் தமிழிலேயே அர்ச்சனை செய்யவேண்டும் என்ற கோரிக்கை பற்றிக் குறிப்பிடுகையில், 'கோவில்களில் சமஸ்கிருதம் இருப்பதா, தமிழ் இருப்பதா என்பதை இரு மொழிகளின் சிறப்பியல்புகளை நன்கு உணர்ந்தவர்களும் ஒன்றுகூடி முடிவு செய்ய வேண்டு'மென்று கூறினாராம்.

மருத்துவத் துறைக்கு ஐந்தாண்டுத் திட்டம் பெரும் ஏமாற்றமே!

பலவித மருத்துவ முறைகள் குறித்து முரண்பட்ட கருத்துக்கள்

"ஐந்தாண்டுத் திட்டத்தில் சுகாதாரத் திட்டங்களைப் பொறுத்தவரையில் 40 சதவிகித வெற்றிதான் கிடைத்திருக்கிறது; இது ஒரு பெரும் ஏமாற்றமாகும்; தேவையான அளவு பயிற்சி பெற்றவர்கள் கிடைக்கவில்லை என்பதுதான் இதற்குக் காரணம் என்று கூறுவது, மேலும் ஏமாற்றத்தைத்தான் தருகிறது;

"ஐந்தாண்டுத் திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ளதைப் போல, 10 மடங்கு மருத்துவ மனைகளும், கிராம வைத்தியசாலைகளும் திறப்பதற்குப் போதுமான அளவு வசதிகள் நம்மிடம் இருக்கின்றன;

"திட்டம் சரிவர அமுல் செய்யப்படாததற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் திறமைக் குறைவும், திறமை மிகுந்த டாக்டர்களுக்குத் தரப்படும் குறைவான சம்பள விகிதமும்தான் காரணமாகும்,"

—என்று, டாக்டர் சென், லக்னோவில் நடைபெற்ற அகில இந்திய மருத்துவ மாநாட்டிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

"ஹோமியோபதி மருத்துவ முறை, அது பிறந்த நாடான ஜெர்மனியில் செத்துவிட்டது. அது வளர்ந்து வளம் பெற்றதாகக் கூறப்படும் அமெரிக்காவில்கூட, இன்று அது இல்லை; அப்படி இருக்க, இங்குமட்டும் அந்தத் துறைப் பயிற்சிக்கும், ஆராய்ச்சிக்கும் பணம் ஒதுக்கப்படுவதின் காரணம் எனக்குத் தெரியவில்லை,"

என்றும் டாக்டர் சென் கூறினார்.

"ஆயுர்வேத,யூனானி முதலியமருத்துவ முறைகளின் மீது வெறுப்பு காட்டப்படாவிடினும் கூட, இன்று பலத்த கண்டனம் எழுப்பப்படுகிறது; மருத்துவத் துறையில், மேலை நாட்டை மட்டும் அப்படியே 'காப்பி' அடித்துவிட்டு, நாட்டில் ஊன்றி வளர்ந்துள்ள முறைகள் குறித்து அக்கரை காட்டாதிருப்பது வருந்தத்தக்கதாகும்; ஆயுர்வேத முறை இன்னும் நாட்டில் நிலவுகிறது; பல்லாயிரக்கணக்கானோர் அம்முறையில் சிகிச்சை பெற்று பலனடைகின்றனர்;"

என்று அதே மாநாட்டில் பேசிய உத்திர பிரதேச கவர்னர் முன்ஷி குறிப்பிட்டிருக்கிறார்.

மாண்டவர்கள்பிரேதம்

உறவினர்கள் கோரவில்லை?

சூரத், டிச. 28—

இங்கிருந்து 40 மைல் தொலைவில் உள்ள 'வாலட்' கிராமத்தில் நடைபெற்ற கலவரத்தை ஒட்டி, போலீசார் 15 பேரைக் கைது செய்துள்ளனர். இவர்களில் 4 பேர் பெண்களாம்.

'ஆதிவாசிமண்டல்' என்னும் மலைவாசிகளின் அரசியல் — மத கழகத்தின் தலைவரும் கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர்.

கலவரத்திற்குக் காரணமாக இருந்த மிராசுதாரினால் வெளியேற்றப்பட்ட விவசாயிகள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போலீசார் துப்பாக்கிப் பிரயோகத்தில் மாண்டு போனவர்களின் உடல்கள் பரிசோதனைக்குப் பின்னர் தீக்கொளுத்தப்பட்டன.

இந்தியாவில் தையல் இயந்திரங்களின் உற்பத்தி, 1950—51-ல் 32,965 ஆக இருந்தது, 1953—54-ல், 68,417 ஆக அதிகரித்திருக்கிறது. 1955—56-ம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள லட்சிய உற்பத்தி அளவு 91,500 இயந்திரங்களாகும்.

பட்டம் ஆட்சியின் நிலைமை

இராஜப் பிரமுகருக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரபணை

காங்கிரசார் எதிர்த்து வாக்களிப்பர்

திரு-கொச்சி சட்டசபையின் அடுத்த கூட்டத்தில் இராஜப் பிரமுகர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு எதிராக காங்கிரஸ் உறுப்பினர்கள் வாக்களிப்பார்கள் என்று தெரிகிறது.

திரு-கொச்சி சட்டசபையில் 46 காங்கிரஸ் உறுப்பினர்கள் உள்ளனர். சட்டசபை ஜனவரி 25-ம் தேதி கூடுகிறது.

'ராஜப் பிரமுகருக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் காங்கிரசாரின் திருத்தம் ஒன்று நிறைவேறினால், சர்க்கார் இராஜினாமா செய்யுமா?' என்று கேட்டபோது, 'அது, பிரதமர் முடிவு செய்ய வேண்டிய பிரச்சினை,' என்று காங்கிரஸ் முக்கியஸ்தர் ஒருவர் கூறியுள்ளார்.

தமிழ்நாடு காங்கிரஸ் சரித்திரத்தில் ஓர் பொன்னேடு!

அரிசன ஊழியர் பி. கக்கன் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்

'மற்ற மாநிலங்களுக்கு ஒரு உதாரணம்' என காமராசர் பெருமிதம்

சென்னை, டிச. 29—

தமிழ்நாடு காங்கிரசின் சரித்திரத்தில் முதல் தடவையாக அரிசன வகுப்பைச் சேர்ந்த ஒருவர் தமிழ்நாடு காங்கிரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்தியப் பாராளுமன்ற உறுப்பினரான தோழர் பி. கக்கன் தமிழ்நாடு காங்கிரசின் தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தலைவர் தேர்தலுக்காக நடைபெற்ற கூட்டத்தில் கக்கன் அவர்களைத் தலைவர் பதவிக்கு முதல் அமைச்சர் காமராசர் முன்மொழிந்தார்.

காங்கிரசின் மாநாடு நடைபெறும் இச்சமயத்தில் தாழ்த்தப்பட்ட இனத்தவர் ஒருவர் தமிழ்நாடு காங்கிரசின் தலைவராக இருப்பது முதல் தடவையாகும்.

"இப்படி ஒருவரைத் தேர்ந்தெடுத்ததின் மூலம் தமிழ்நாடு காங்கிரஸ், மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியுள்ளது," என்று கக்கனைப் பாராட்டிப் பேசுகையில், காமராசர் கூறியுள்ளார்.

தோழர் பி. கக்கன் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த மேலூர் வட்டத்தைச் சேர்ந்தவர்; காந்தி சேவா சங்க உபகாரச் சம்பளத்தின் மூலம் திருமங்கலம் பள்ளியில் எஸ். எஸ். எல். சி. வகுப்பு வரை படித்தவர்; நீண்டகாலமாக இவர் காங்கிரசில் ஊழியராக பணியாற்றுகிருர்.

தலைவர் தேர்தலுக்காக நடைபெற்ற தமிழ்நாடு காங்கிரஸ் குழு கூட்டத்தில் மொத்த உறுப்பினர்கள் 294 பேர்களில் 230 பேர் வந்திருந்தனராம். தோழர் ஆச்சாரியார் கூட்டத்திற்கு வரவில்லை என்று தெரிகிறது.

ஆசிய - ஆப்பிரிக்க மாநாடு

சீனு, ஜப்பானுக்கு அழைப்பு

25 நாடுகள் கலந்துகொள்ளும்

பாகார் (இந்தோனேஷியா)

டிச. 29—

வருகிற ஏப்ரல் திங்களில் இந்தோனேஷியாவில் நடைபெற விருக்கிற ஆசிய – ஆப்பிரிக்க நாடுகளின் மாநாட்டுக்கு மக்கள் சீனவையும், ஜப்பானையும் அழைப்பது என்று, இங்கு கூடிய பேசிய ஐந்து ஆசிய பிரதமர்கள் வெளியிட்டுள்ள கூட்டறிக்கை ஒன்றில் காணப்படுகிறது.

அணுகுண்டு, பொருளாதாரத் துறையில் ஒத்துழைப்பு, உலகில் நிலவி வருகின்ற நெருக்கடியை நீக்க எடுத்துக்கொள்ள வேண்டிய முயற்சிகள் ஆகியவை பற்றி, அம் மாநாட்டின்போது விவாதிக்கப்படலாம் எனவும் அவ்வறிக்கையில் காணப்பட்டுள்ளது.

"ஆசிய — ஆப்பிரிக்க நாடுகளிடையே நல்லெண்ணத்தையும், ஒத்துழைப்பையும் வளர்த்தல்,"— "சமூக, பொருளாதார, கலாச்சாரப் பிரச்சினைகளையும், மாநாட்டில் கலந்துகொள்ளும் நாடுகளின் உறவு முறையையும் பரிசீலித்தல்" —"இனப் பிரச்சினை, காலனி ஆதிக்கம் இவை போன்றவைகளை பரிசீலித்தல்" — "ஆசிய—ஆப்பிரிக்கர்கள்; உலகில் இன்று வகித்து வரும் நிலை, உலக சமாதானத்தையும், நாடுகளிடையே ஒற்றுமையையும், ஒத்துழைப்பையும் வளர்க்க அவர்கள் ஆற்றக்கூடிய பணிகள் பற்றியும் பரிசீலித்தல்" —ஆகிய இந்த நான்கு நோக்கங்களே, இம்மாநாடு கூடுவதற்கான முக்கிய நோக்கமாகும் எனவும் கூறப்படுகிறது.

இம்மாநாட்டில் கலந்துகொள்ள மக்கள் சீனு, ஜப்பான் ஆகியவைகள் உட்பட 25 நாடுகளுக்கு அழைப்பு அனுப்பப்பட்டுள்ளதெனத் தெரிய வருகிறது.

திரு—தமிழகப் போராட்டம்

வழக்குகளை விசாரிக்க அவசர ஏற்பாடுகள்

திரு—தமிழக இணைப்புப் போராட்டத்தின் விளைவாகத் தொடரப்பட்டுள்ள வழக்குகள் எல்லாவற்றையும் விசாரணைசெய்வதற்காக நாகர்கோவிலை அடுத்த தக்கலையில் விசேட மாஜிஸ்திரேட் கோர்ட் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறதாம்.

இதை முன்னிட்டு, தக்கலை ஜெயிலிலேயே இருந்துவரும் 117 கைதிகளுடன், குழித்துறையிலிருக்கும் ஏ. குஞ்சன் நாடார் எம். எல். ஏ., குழித்துறை நகராண்மைக் கழகத் தலைவர் வில்லியம் எம். எல். ஏ., ஆகியோரும் தக்கலைக்கு மாற்றப்பட்டு விடுவரென்றும் கூறப்படுகிறது.

தற்போது தக்கலையில் சிறை வைக்கப்பட்டுள்ள 117 பேர்களும் நான்கு அறைகளில் அடைக்கப்பட்டுள்ளனராம்! மேலும் ஐந்தாவதாக ஒரு அறை இப்போதே காலி செய்யப்பட்டு, மேலும் வருபவர்களைப் பாதுகாக்கத் தயார் செய்யப்பட்டு விட்டதாம்!

மலையாளிகளின் மூல மொழி தமிழே!

மலையாளக் கவிஞர் விளக்கம்

திருவனந்தபுரம், எப். 29—

"ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மலையாள மக்கள் வழங்கி வந்துள்ள மொழி தமிழ் மொழியே ஆகும்; இந்த உண்மைக்கு 'சிலப்பதிகாரம்' நூல் ஒன்றே தக்க சான்றும்."

என்று; இங்கு நடைபெற்ற 'சேரள சாகித்திய பரிஷத்'தின் மூன்றுவது இசை விழாவில் தலைமை வகித்துப் பேசிய கவிஞர் என். கோபால பிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

"மலையாள நாடு தங்களுக்கு ஒரு மாற்றாந் தாய் நாடு என்று இன்னும் சில தமிழர்கள் கருதிக் கொண்டு 'சிலப்பதிகாரத்'தைத் தங்கள் ஏகபோக உரிமை என்று கூறுகின்றனர்; அந்த நூலை இயற்றியவர் சோழ நாட்டுப் பெரும் தமிழ்ப் புலவர் இளங்கோவடிகள் என்பதை அவர்கள் உணரவேண்டும்," என்று, மேலும் அவர் கூறியிருக்கிறார்.

திருவாங்கூர் - கொச்சி மாநிலத்தில் உள்ள இந்திய ரசாயன பண்கள் தொழிற்சாலையை மத்திய சர்க்காரும், மாநில சர்க்காரும் கூட்டாக நடத்திவருகிறார்கள்.

கழகக் கூட்டங்கள்

★

சேலம் (டவுன்)

30-வது வார்டு கருங்கல்பட்டியில்
31—12—54 மாலை 6 மணிக்கு
தலைவர் : எம். நாராயணசாமி
பேசுவோர் :
ஈ. வெ. கி. சம்பத்
ஈ. ஆர். கிருஷ்ணன்
சிற்றுளி சுப்பிரமணியம்

★

திருமால்பேட்டை

1—1—55 சனி மாலை
தலைவர் : முனுசாமிதுரை
பேசுவோர்:
மணிஎழிலன்
தென்னரசு

★

மதுராந்தகம்

தி. மு. கழக துவக்க விழா
பெரியகயப்பாக்கம்
1—1—55 மாலை 6 மணிக்கு
தலைவர் : கே. கோதண்டம்
பேசுவோர்:
ஏ. எஸ். இமயவரம்பன்
எம். எம். ராசாபாதர்

சென்னை 44-வது வட்ட தி.மு.க. செயற் குழு உறுப்பினர்கட்கு

1-1-55 இரவு 8 மணிக்கு, சென்னை 44-வது வட்ட தி. மு. கழகப் பணி மனையில் (எண் 2, ஆக்க நாதபுரம் சென்னை) செயற் குழுக் கூட்டம் நடைபெறும். திராவிடர் திருநாள், கிளைக் கழகப் பொருளாதாரம் ஆகிய பிரச்சினைகள் குறித்த விவாதிக்கப்படும்.

திருச்சி தி. மு. கழக பொது உறுப்பினர்கட்கு

1-1-55 இரவு 9 மணிக்கு, திருச்சி, பெரியகடை வீதியில், திருச்சி தி. மு. கழக பொது உறுப்பினர் கூட்டம் தோழர் பி. பாண்டுரங்கன் தலைமையில் நடைபெறும்.

மதுரை திராவிட மறுமலர்ச்சி மன்றம், அழகிரி நினைவுப் படிப்பகச் செயற் குழு உறுப்பினர்கட்கு

1-1-55 இரவு 10 மணிக்கு, மதுரை, கீழ மாசி வீதியில், திராவிட மறுமலர்ச்சி மன்றம், அழகிரி நினைவுப் படிப்பகத்தின் செயற் குழுக் கூட்டம் நடைபெறும். அதபோது மதுரை தி. மு. கழக மாநாட்டு ஆக்க வேலை பற்றி முடிவு செய்யப்படும்.

மைசூர் மந்திரி சபை குழுவிற்கு அதிர்ச்சி!

ஆந்திர காங்கிரசில் காணப்படுவதுபோல் மைசூர் காங்கிரசிலும் பெரும் பிளவு ஏற்பட்டிருக்கிறதாம்.

மைசூர் பிரதேச காங்கிரசின் தலைவர் தேர்தலில், இப்போது ஆட்சிபீடத்திலுள்ள அமைச்சர் குழுவினரின் அபேட்சகர் தோல்வி அடைந்துவிட்டார்.

மைசூர் முதலமைச்சர் அனுமந்தய்யாவின் ஆதரவு பெற்ற தோழர் மாதவராவ் என்பவருக்கு 47 வாக்குகளும், அனுமந்தய்யாவின் மந்திரி சபையை எதிர்க்கும் குழுவைச் சேர்ந்த எஸ். சன்னையாவுக்கு 53 வாக்குகள் கிடைத்ததாம்.

மொத்த உறுப்பினர்கள் 102 பேரில் 100 பேர் வாக்களித்துள்ளனர். மைசூர் சட்டசபை தலைவர் வாக்களிக்கவில்லையாம்.

மைசூர் காங்கிரசில் நீண்டகாலமாக நிலவிவரும் கலக நிலைமை இத்தேர்தல் மூலம் தீர்ந்துவிடுமென்று பலர் எதிர்பார்த்தனராம்; ஆனல், இப்போது மந்திரிசபை கோஷ்டி, பிரதிநிதி ஸ்தாபன கோஷ்டியிடம் தோற்றுவிட்டதால் மைசூர் அரசியலில் முக்கிய மாறுதல்களை உண்டாகும் என்று நம்பப்படுகிறது.

★

ஐதராபாத்திலும் பலத்த போட்டி!

ஐதராபாத் காங்கிரஸ் தலைவர் தேர்தலிலும் பலத்த போட்டியிருந்ததாம். தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் ஜே. வி. நரசிங்க ராவுக்கு 83 வாக்குகளும், அவரை எதிர்த்துப் போட்டியிட்ட மல்லப்ப கொல்லூருக்கு 74 வாக்குகளும் கிடைத்தனவாம்.

பிரதேச காங்கிரஸ் தலைவர் தேர்தலில் கலக நிலைமை!

ஆந்திராவில் காங்கிரஸ் தேர்தல் கூட்டணி கலகலக்கிறது

கொச்சியில் எதிர்ப்பும் குண்டூரில் நேசமும் தந்த விளைவு!

மைசூர் தேர்தலில் மந்திரிசபை கோஷ்டி தோல்வி

ஆந்திர காங்கிரஸ் தலைவர் தேர்தல் ஒத்திவைப்பு

சென்னை, டிச. 30—

ஆந்திர பொதுத் தேர்தலுக்காகக் காங்கிரஸ் கட்சியினர் பி. சோ. கட்சி, கிருஷிக் லோக் கட்சி ஆகியவற்றுடன் கூட்டு சேர்ந்திருப்பதைப் பொதுமக்கள் அறிவார்கள். ஆனல் இக்கூட்டு முயற்சியின் பயனுய், ஆந்திர காங்கிரசில் பெரும் பிளவுகள் தோன்றியிருக்கின்றனவாம்.

திரு—கோச்சியில் தங்களை உதறித் தள்ளும் காங்கிரஸ் கட்சியுடன் கூட்டுச் சேர்வது குறித்து ஆந்திர பிரஜா—சோஷலிஸ்டு கட்சியினர் பலர் மனவேதனை அடைந்திருக்கிருர்களாம்.

சித்தூர் தொகுதியில் காங்கிரசின் ஐக்கிய முன்னணியின் சார்பில் தாங்கள் விரும்பியவரைத் தேர்ந்தெடுக்காததை எதிர்த்து, சித்தூர் நகர காங்கிரசின் தலைவர், உபதலைவர், செயலாளர், கூட்டுச் செயலாளர் உள்பட 16 பேர் காங்கிரசிலிருந்து இராஜினமா செய்துள்ளார்கள்.

காங்கிரசிலிருந்து, இராஜினமா செய்தவர்கள், 'சுதந்திர காங்கிரஸ் சங்கம்' என்ற புதிய கட்சி ஒன்றைத் துவங்கியுள்ளனர். இக்கட்சியின் சார்பில் காங்கிரஸ் ஐக்கிய முன்னணி அபேட்சகர்களை எதிர்த்துப்போட்டியிடுவதற்கு, அபேட்சகர்களை நிறுத்தத் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது.

காளஸ்தி, சித்தூர், புத்தூர், வயல்பாடு, பிலர், வடமலைப்பேட்டை, தாவனம்பள்ளி ஆகிய தொகுதிகளில் காங்கிரஸ் கூட்டணி அபேட்சகர்களுக்கு எதிராக, 'சுதந்திர காங்கிரஸ் சங்கம்' அபேட்சகர்களை நிறுத்தும் என்று தெரிகிறது.

முன்னணியின் சார்பில் அபேட்சகர்களைத் தேர்ந்தெடுத்த போக்கில் வெறுப்படைந்த ஆர். பி. ராமகிருஷ்ண ராஜு காங்கிரசிலிருந்து இராஜினமா செய்துவிட்டார்.

காங்கிரசின் போக்கை, ராஜமகேந்திரபுரத்தில் கூடிய பி. சோ. கட்சி வன்மையாகக் கண்டித்துள்ளதாம்.

'தங்கள் முறையீடுகளும், யோசனைகளும் செவிடன் காதில் ஊதிய சங்காகுமானல், தேர்தல் ஐக்கியம் சீர்குலைந்துவிடும்"

என்று பி-சோ. கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் எச்சரித்துள்ளாராம்.

உடனே டில்லியுடன் தொடர்பு கொள்ளுமாறு டி. விஸ்வநாதத்தை பி.-சோ கட்சி கேட்டுக்கொண்டிருக்கிறது.

விஜயவாடாவில் ஆந்திர காங்கிரஸ் தலைவர் தேர்தலுக்காகக் கூட்டப்பட்ட ஆந்திர காங்கிரசின் கூட்டம், தலைவர் தேர்தலை அடுத்த மார்ச் 10-ந் தேதி வரை ஒத்திப்போட்டுவிட்டது.

ஆந்திர காங்கிரசின் தலைவரான பி. கோபால் ரெட்டியை மீண்டும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்க செய்யப்பட்ட முயற்சிக்கு எதிர்ப்பு காணப்பட்டதாம்; ஆகவே, தற்போதைய நிலைமையே தேர்தல் முடியும்வரை நீடிக்கட்டும் என்று தலைவர் தேர்தலை ஒத்திப்போட்டுவிட்டார்களாம்.

இக்கூட்டத்தில் ஸ்ரீகாகுளம், விசாகப்பட்டினம், கிருஷ்ணா, கோதாவரி மாவட்டங்களில் அபேட்சகர்கள் பொறுக்கப்பட்டது பற்றி பலத்த எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதாம்.

திராவிட - ஆரிய..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திராவிடக் கலாசாரத்திலிருந்து வந்தவையே. 'வந்தே மாதரம்' இன்றி 'சுதந்திர இந்தியா' உண்டா? அதைப் போன்றே சக்தியாகிய அன்னையைப் போற்றமலும் இந்தியா இருக்க முடியாது."

மேலும் அவர் பேசுகையில், 'திராவிட இயக்கம் போன்றவை நாட்டிற்கு பெருந்தீங்கு பயப்பன,' என்றும் குறிப்பிட்டிருக்கிறர்.

தேஷ் பாண்டே பேசுகையில் தென்னாட்டில் தோன்றியுள்ள மத எதிர்ப்பு இயக்கத்தைக் குறிப்பிட்டு, 'சர்க்கார், சில மசோதாக்களால் இதைத் தடுத்துவிட முடியாது;' என்று கூறியிருக்கிறர்.

"ஏழைகளுக்காகவும், தாழ்த்தப்பட்டவர்களுக்காகவும் சேவை செய்து, இந்த சமூகத்தைப் பலப்படுத்தவேண்டும்" என்றும் குறிப்பிட்டிருக்கின்றனர்.

சென்னையில் சமாதான மாநாடு

ஆசிய ஒற்றுமைக்கும், சமாதானத்திற்குமாக சென்னையில் அகில இந்திய சமாதான மாநாடு ஒன்று செயின்ட் மேரி' மண்டபத்தில் நடைபெறுகிறது.

மாநாடு 1954 டிசம்பர் 30 முதல் 1955 ஜனவரி 2-ந் தேதி வரை பல கலை நிகழ்ச்சிகளுடன் நடைபெறும்.

மாநாட்டில் உலக சமாதானத் தலைவர்கள் பலரும், பிரபல சினிமா நட்சத்திரங்கள், லலிதா, பத்மினி, ராகினி, குமாரிசரோஜா, ஜி. வரலட்சுமி, வசந்தகுமாரி, என். எஸ். கிருஷ்ணன், எம். ஜி. ராமச்சந்திரன், சிவாஜி கணேசன். சகஸ்ரநாமம், கண்டசாலா ஆகியோர் பங்கு பெறுகிருர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகத் துக்கதோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிட்டு பெற்று (21, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : சி. என். அண்ணாதுரை, எம். ஏ.,

பெங்களூர் மாநாடுகள்-ஜன.1,2-ல்!